(ஆ) திருப்பூர் ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை மில் மூடப்பட்டதால் ஏற்பட்டுள்ள தொழிலாளரின் அவதியுறும் நிலை

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, "திருப்பூரில் உள்ள ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை மில் கடந்த 1-11-1969-ம் தேதி முதல் நிர்வாகத்தின் போக்கு காரணமாக மூடப்பட்டு தொழிலாளர்கள் அவதியுறும் நிலை பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, திருப்பூர், ஸ்ரீராமலிங்க சூடாம்பிகை ஆலை நிர்வாகத்தினர், தங்கள் ஆலைத் தொழிலாளர்கள் 21-10-1969 முதல் அறிவிப்பின்றி உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வதாக 1-11-1969-ல் தொழிலாளர் ஆணையருக்குத் தெரிவித்தனர். ஆலை நிர்வாகத்தினர் தொழிலாளருடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி 1968-ம் ஆண்டுக்கான பூரிப் பூதியத்தை நிர்வாகத்தினர் அளிக்கத் தவறியதனால் இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. இவ் வேலை நிறுத்தத்தையடுத்து 2-11-1969 முதல் கதவடைப்புச் செய்ததாக நிர்வாகத்தினர் அறிவித்ததனர். இதில் 1,050 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கோயம்புத்தூர் தொழிலாளர் துணை ஆணையர் உரையாடல் நிகழ்த்தினர். ஆனால் எத்தீர்வும் ஏற்பட முடியவில்லை.

தொழிலாளர் ஆணையர், தொடர்புடைய தரப்பினருடன் சென்னையில் 8-1-1970-ல் இது குறித்து விவாதித்தார். ஆலையை மீண்டும் திறந்து வேலையைத் தொடங்க வேண்டுமென்று சங்கங்கள் விரும்பியபோது தங்களுடைய நிதி இடர்ப்பாடுகளின் காரணமாக ஊதியங்களும் வேலைச் சுமை அளவுகளும் தக்கவாறு திருத்தியமைக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ரூ. 40 ஊதிய வெட்டு ஒப்புக் கொள்ளப்பட்டால் அன்றி, ஆலைகளை மீண்டும் திறந்து ஆதாயமாக நடத்துவது இயலாதென்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர். நிர்வாகத்தினர் ஆலையைத் திறந்து, தொழிலாளர்களுடன் அவர்களின் இடர்ப்பாடுகளைக் கலந்து பேசலாமென்று தொழிலாளர் ஆணையர் நிர்வாகத்தினரிடம் கருத்தறிவித்தார். மேலும் இழப்பு ஏற்படாதவாறு ஆலையை நடத்துவதற்கு இயலும் வகையில் ஏதேனுமொரு ஏற்பாடு செய்யப்படுகிற வரையில் ஆலையைத் திறக்க இயலாத நிலையில் இருப்பதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர். தொழிலாளரின் துயரைத் தணிக்கும் வகையில் தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு சேர்மானத் தொகையிலிருந்து பணம் பெற்றுக் கொள்வதற்காவது தொழிலாளர்களுக்கு வசதி செய்ய வேண்டுமென்று கோயம்புத்தூர் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பிரதிநிதியான திரு. எஸ். துரைசாமி விரும்பினர். தொழிலாளர்கள் வேலை தொடங்குவதற்கு விரும்பினால், அந்த விருப்பத்தை எழுத்து மூலம் தெரிவித்தால், அவர்களின் வருங்காலச் சேமிப்பு நிதிச் சேர்மானத் தொகையிலிருந்து பணம்

பெற்றுக்கொள்வது குறித்து வட்டார வருங்காலச் சேமநிதி ஆணையருடன் தாம் பேசுவதற்கு இயலும் என்று தொழிலாளர் ஆணையர் அவரிடம் தெரிவித்தார். வேலை தொடங்குவதற்கான விருப்பத்தைத் தொழிலாளர் சங்கங்கள் எழுத்து மூலம் இப்போது தெரிவித்து உள்ளன. இது குறித்து வருங்காலச் சேமிப்பு நிதி ஆணையர் நடவடிக்கை எடுத்து வருகிறார். நானும் மேற்கண்ட தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு முன்தொகை விரைவில் கிடைக்க ஆவன செய்யக் கூறியுள்ளேன்.

நிர்வாகத்தின் பிரதிநிதிகளுடன், சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் இந்த மன்றத்தில் உள்ள மூன்று சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு இரு நாட்கள் நான் விவாதம் நடத்தினேன். ஆலைகளைத் திறக்குமாறு ஆலை நிர்வாகப் பிரதிநிதிகளுக்கு அறிவுரை கூறப்பட்டது. நிர்வாகத்தினருடன் முழு அளவிற்கு ஒத்துழைக்குமாறு சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் அறிவுரை கூறப்பட்டது.

நல்ல முடிவை நாம் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்களது அறிக்கையில் இருந்து அந்த மில்லில் சம்பளக் குறைப்பும் வேலைப் பளு அதிகரிப்பும் ஏற்படும் நிலை இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, தமிழக அரசு கார்ப்பரேஷன் மூலம் அதை ஏற்று நடத்தினால் அது லாபகரமான முறையில் நடப்பதற்கு வாய்ப்பிருப்பதாக அதிகாரிகள் தெரிவிப்பதன் காரணமாக அதை கார்ப்பரேஷன் மூலமாக ஏற்று எடுத்து நடத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : மில்லைத் திறந்து நடத்துவதற்குரிய விதத்தில் இன்னும் ஏதாவது சாதகங்கள் கிடைக்குமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உறுப்பினர் அவர்கள் சொல்கிற யோசனைப்படிதான் இறுதி முடிவு எடுக்க வேண்டுமென்றால் தொழில் துறையுடன் கலந்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க ஆவன செய்யப்படும்.

திரு. சு. துரைசாமி : அந்த ஆலை நிர்வாகத்தினர் கால தாமதம் செய்து வருகிற நிலை இருப்பதால் பேச்சு வார்த்தைகள் நடத்துவது என்றால் அதையும் நடத்திக் கொள்ளலாம். வேலைகளைத் துரிதப்படுத்துகிற வகையில் கார்ப்பரேஷன் எடுப்பதற்கு வேண்டிய முன் நடவடிக்கைகளை எடுத்தால் அது மில்லைத் திறப்பதற்கு உதவிகரமாக இருக்கும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு பேச்சு வார்த்தையும் நடைபெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ள உறுப்பினர் திரு. துரைசாமி அவர்களையும் வைத்துக்கொண்டுதான் கடந்த இரண்டு நாட்களாக

1970 ஜனவரி 27] திரு. கா. வேழவேந்தன்]

பேச்சு வார்த்தைகள் நடத்தியிருக்கிறோம். அவர்களுக்கு அதன் முழு விளக்கங்களும் தெரியும். எப்படியாவது மில் திறக்கப்பட வேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்றும் அரசு முனைந்து கொண்டிருக்கிறது. மேற் கொண்டு தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றால் உறுப் பினர் அவர்களுடன் இணைந்து அவர்கள் சொல்கிற அளவில் மேற் கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முயலலாம்.

5. அமைச்சர் அறிக்கை

கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பு குறித்து, மானியக் கோரிக்கை விவாதத்தில் அளித்த பதிலுக்கு வேளாண்மை, அரிசன நலத்துறை அமைச்சர் அளித்ததிருத்த அறிக்கை

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுச் சட்டமன்றப் பேரவையில் 21–3–1969 அன்று, மருத்துவம், பொதுச் சுகாதாரம், பொதுச் சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில், முன்பு சுகாதாரத் துறையின் பொறுப்பு வகித்து வந்த வேளாண்மை-அரிசன நல அமைச்சர், இந்திய மருத்துவ முறைப் பட்டப் படிப்பும் ((B.I M) கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பும் (B.V.Sc.) நான்கு ஆண்டுக்கால அளவைக் கொண்டுள்ளதால், கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு வழங்கப்படுகிற அதே சம்பள விகிதங்கள் இந்திய மருத்துவ முறை பட்டதாரிகளுக்கும் வழங்கப்படும் என்று பேரவையில் தெரிவித்தார். கால்நடை மருத்துவப் பட்டப்படிப்பு குறித்த உண்மையான நிலை கீழ்க்கண்டவாறு உள்ளது :

"கால்நடை மருத்துவ கால்நடை வளர்ப்பு குறித்த கால்நடை மருத்துவ பட்ட பாட முறை 6½ திங்கள் செயற்முறைப்பண்ணைப் பயிற்சி உட்பட 6 கல்வி ஆண்டுகளைக் கொண்டதாகும்".

இவ்வாறு பார்க்கையில் கால்நடை மருத்துவப் பட்டப் பாட முறை 6 ஆண்டு என்ற நீண்ட கால அளவைக் கொண்டதாகையால் இந்திய மருத்துவ முறைப் பட்டப் படிப்பும், கால்நடை மருத்துவ பட்டப் படிப்பு எல்லாக் கூறுகளிலும் ஒப்பானவையெனக் கருத இயலாது.

3. அரசினர் தீர்மானங்கள்---தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவலுடன் வரிசையில் மாற்றம்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, in lieu of the motion already circulated, I move—

"That, under sub-rule (3) of Rule 21 of the Tamil Nadu Legislative Assembly Rules, Item IV—Second Supplementary Statement of Expenditure for the year 1969–70, and Item V—Government Bill—be taken up before Item III—Discussion on Governor's Address."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.